# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, MADURAI

## M.C.O.P. No.2141/2019

## R.W.3

Deposition of Witness for the Petitioner / Respondent Solemnly affirmed by of this Court on **02.11.2023** in accordance with the Provisions of Evidence Act X of 1872.

Name பாலமுருகன் Father Name : பஞ்சாட்சரம்

Village : Taluk :

Caste : Religion :

Calling : Age :

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு முதல் விசாரணை :**

நான் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் சென்னையில் இயங்கி வரும் பிராந்திய அலுவலகத்தில் துணை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு விவரங்கள் ஆவணங்களின் அடிப்படையில் தெரியும். TN 47 L 5537 காப்பீட்டு பத்திர எண்.2574/CSC/02379197/00/000 என்ற தகவலின் அடிப்படையில் எங்கள் அலுவலக கணினியில் தேடப்பட்டத்தில் கிடைத்த திரைப்பிடிப்புகள் (Screenshots) (4 எண்ணிக்கை) தாக்கல் செய்கிறேன். அது எமசாஆ 4 வரிசை ஆகும். அது மனுதாரர் மற்றும் 1ம் எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்பட்டது. சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு எங்கள் நிறுவனத்திலிருந்து கொடுக்கப்பட்ட புகாரின் உண்மை நகல் எமசாஆ 5 ஆகும். புகாரை அனுப்பியதற்கான அஞ்சலக ரசீது உண்மை நகல் எமசாஆ 6. புகார் மனு சார்வு செய்யப்பட்டதற்கான அஞ்சல்துறை வலைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட ஆவணம் எமசாஆ 7 ஆகும். மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

நான் சுமார் ஒன்றரை ஆண்டுகளாக எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். 16.03.2019 தேதி 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு வழங்கப்பட்ட காப்பீடு பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சாட்சி தாமாக மேற்படி காப்பீட்டு நகல் எங்கள் நிறுவனத்தால் வழங்கப்படவில்லை என்பதை

விசாரித்து தெரிந்துகொண்டோம் என்று சொல்கிறார். பொதுவாக மோட்டார் வாகன காப்பீட்டு இ சேவை மையம் மூலமாகவும் ஏஜென்ட் மூலமாகவும் புதுப்பித்துக்கொள்ளலாம் என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்தால் வழங்கப்படும் காப்பீடுகளையும் இசேவை மையம் மூலமாக புதுப்பித்துக்கொள்ளலாம் என்றால் சரிதான். மசாஆ 3 ஆவணத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் தணிக்கையின் போது 16.03.2020 தேதி Universal Sompo General Insurance Ltd. காப்பீட்டு எண் 2574/CSC/02379197/00/000 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அந்த ஆவணம் பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள எமசாஆ 4 ஆவணம் வழக்கிற்கு சம்பந்தப்பட்ட ஆவணம் இல்லை என்றும் நாங்களே எங்கள் நிறுவனத்தில் போலியாக தயார் செய்து இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 4 வருடம் காலதாமதம் கழித்து 2023ம் வருடத்தில் தான் காவல் துறை கண்காணிப்பாளரிடம் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் அனுப்பிய புகாருக்கு என்ன மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. எங்கள் நிறுவனத்திலிருந்து முறைான புகார் கொடுக்கப்படவில்லை என்பதால் தான் மேல்நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர்கள் மனுவில் சொல்லியுள்ள காப்பீட்டு எண் முறையானது என்றும் ஆகையால் 2ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்குரிய இழப்பீட்டை வழங்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

<u>1ம் எதிர்மனுதாரர் தரப்பு கு.வி –</u>

2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு புதுக்கோட்டை மாவட்டத்தில் வாகனங்களுக்கு காப்பீடு வழங்கக்கூடிய கிளை அலுவலகம் இருக்கிறதா என்றால் இல்லை. எங்கள் நிறுவனத்தின் ஏஜென்ட் மட்டும் இருந்து காப்பீடு செய்துகொடுக்கக்கூடிய இடம் வாடிக்கையாளர் சேவை மையம் ஆகும். புதுக்கோட்டை மாவட்டத்தில் எங்கள் நிறுவனத்தின் எத்தனை வாடிக்கையாளர் சேவை மையம் உள்ளது என்று எனக்கு தெரியாது. அந்த வாடிக்கையாளர் சேவை மையத்தில் ஏஜென்டுகள் இன்சூரன்ஸ்க்கான தொகையை வாங்கி

அங்கீகரிக்கப்பட்ட ஏஜென்சி மூலம் கவர் நோட் கொடுக்கப்பட்டு பின்னர் எங்கள் அலுவலகத்திற்கு ஆவணங்கள் அனுப்பப்பட்ட பின்னர் காப்பீடு வழங்கப்படும். புதுக்கோட்டை மாவட்டத்தில் செந்தில் என்ற அதிகாரப்பூர்வ ஏஜென்ட் இயங்கி வருகிறாரா என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்களை படித்து பார்த்திருக்கிறேன். எ.ம.சா,–1 சாட்சியத்தில் மேற்படி வாகனத்தை 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் புதுக்கோட்டையை சேர்ந்த செந்தில் என்பவர் மூலம் 2ம் எதிர்மனுதாரர் அதிகாரப்பூர்வ ஏஜென்டிடம் பெற்றேன் என்று சாட்சியமளித்துள்ளார். நாங்கள் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் அந்த சாட்சியத்தை மறுத்து குறிப்பிட்டு சொல்லவில்லை. செந்தில் என்பவர் மீதும் அதிகாரப்பூர்வ ஏஜென்ட் என்பவர் மீதும் ஏற்கனவே குற்ற வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் எனக்கு தெரியாது. அவர்கள் மீது போலியான பாலிசி கொடுத்ததாக குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியவில்லை. 3ம் தரப்பினருக்கான இழப்பீடுகளை எங்கள் நிறுவனம் தான் இழப்பீட்டு தொகையை நீதிமன்றம் உத்தரவிடும் போது செலுத்தும் என்றால் சரிதான். அதிகாரப்பூர்வ ஏஜென்ட்டுகள் செய்யும் நல்ல செயல் மற்றும் கெட்ட செயல் எங்கள் நிறுவனத்தை கட்டுப்படுத்தும் என்றால் சரிதான். எங்கள் அலுவலகத்தில் Premium Received Register உள்ளதா என்றால் யார் பாலிசி வழங்குவார்களோ அவர்கள் அந்த பதிவேட்டை பராமரித்து வருவார்கள். புதுகோட்டை பகுதிக்கு பாலிசி வழங்கும் அதிகாரம் பெற்ற நபர்கள் பராமரிக்கும் Premium Received Register யை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி Premium Received Register எங்கள் நிறுவனத்தில் Manual ஆகவும் இருக்கும் என்றும் computer லிரும் இருக்கும் என்றும் என்றால் எங்கள் நிறுவனத்தில் இல்லை, எங்கள் கிளை அலுவலகத்தில் இருக்கும். புதுக்கோட்டை மாவட்ட கிளை அலுவலகத்திலிருந்து Premium Received Register யை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் எங்கள் நிறுவனத்தின்

சார்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரையை படித்து பார்த்துள்ளேன். எதிர்உரையில் பாரா–3 ல் Fake Policy என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பாலிசி வழங்கப்படவில்லை என்று மறுத்திருக்கிறோம். 2357 என்பது Goods carrying liability policy க்கு போடக்கூடிய product code ஆகும். அதே போல் மற்ற வாகனங்களுக்கு என்னென்ன unique code இருக்கிறது என்று எனக்கு தெரியாது. 2357 code யை தவிர வேறு unique code வழியாக எங்கள் நிறுவனத்திற்கு பிரிமியம் வந்திருந்தால் எங்களுக்கு தெரியாது என்றால் அது சம்பந்தமாக நாங்கள் எதுவும் தேடவில்லை. 2357 தான் எங்கள் நிறுவனத்தில் உள்ள Goods carrying வாகனங்களுக்கு வழங்கப்படும் unique code என்பதை காட்டக்கூடிய ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. 2574 என்ற product code உள்ளது என்றும் அது உண்மையான code தான் என்றும் நஷ்டஈடு கொடுக்கக்கூடாது என்பதற்காக 2574 என்ற code இல்லை என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. மசாஆ 10 ஆவணத்தில் இடதுபக்கம் மேல்பக்கம் உள்ளதை QR Code என்று அழைப்பார்கள். மசாஆ 10 ஆவணத்தில் உள்ள QR Code யை கம்யூட்டரில் ஸ்கேன் செய்தால் எந்த நிறுவனத்திலிருந்து கொடுக்கப்பட்டதோ அந்த நிறுவனத்தின் பெயர் காட்டும். மசாஆ 10 ஆவணத்தை கம்யூட்டரில் ஸ்கேன் செய்து பார்க்கவில்லை. மேற்படி ஆவணத்தை கம்பூட்டரில் ஸ்கேன் செய்து பார்க்காதற்கு காரணம் அந்த பாலிசி எங்கள் நிறுவனத்திலிருந்து வழங்கப்படவில்லை என்பதால் ஸ்கேன் செய்து பார்க்கவில்லை. மசாஆ 10 ல் உள்ள QR Code யை ஸ்கேன் செய்து பார்த்தால் எங்கள் நிறுவனத்தின் QR Code வரும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பொதுவாக விபத்து ஏற்பட்டால் மோட்டார் வாகன ஆய்வாளர் தணிக்கை செய்து அறிக்கை கொடுப்பார் என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வாளர் ஒரு அரசு அதிகாரி என்றால் சரிதான். எங்கள் காப்பீட்டு நிறுவனம் தனியார் இன்சூரன்ஸ் நிறுவனம் ஆகும். மோட்டார் வாகன ஆய்வாளர் தன்னுடைய அறிக்கையில் குறிப்பிடுவதற்கு முன்பாக பாலிசியில் உள்ள QR Code யை உண்மையா

இல்லையா என்பதை சரிபார்த்து எழுதுவார் என்ற விவரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மசாஆ 3 மோட்டார் வாகன ஆய்வறிக்கை ஆவணம் இந்த வாகனத்திற்கு வழங்கப்பட்ட பாலிசியின் QR Code யை சரிபார்த்து அறிக்கை வழங்கியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த மனு 2019 ம் வருடம் இழப்பீடு கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் எங்கள் நிறுவனத்திற்காக வழக்கறிஞர் மூலம் 09.03.2020 ம் தேதியில் மனு தாக்கல் செய்து ஆஜராகியுள்ளோம். எங்கள் நிறுவனத்தின் சார்பில் எதிர்உரை 23.04.2021 ம் தேதியில் தாக்கல் செய்துள்ளோம். 09.03.2020 தேதியிலிருந்து 23.04.2021 தேதி வரை மேற்படி பாலிசியின் தன்மை குறித்து விசாரிக்கவில்லை என்றால் அந்த காலகட்டத்தில் நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பணியில் இல்லை. முதல் முறையாக 2023 ம் ஆண்டு மே மாதம் சிவகங்கை மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடம் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் கொடுத்த புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியாது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதா என்று கண்டறிந்து அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் கொடுத்த புகார் குறித்து எங்கள் நிறுவனத்தின் புலனாய்வு பிரிவில் புகாரின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து கவனித்து வருவார்கள். இன்றைய தேதி வரைக்கும் மசாஆ 10 பாலிசி போலியானது என்பதை நிருபிப்பதற்கு எமசாஆ 4 யை தவிர வேறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மசாஆ 10 பாலிசி உண்மையானது என்றும் நாங்கள் சரியாக விசாரிக்காமல் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. மசாஆ 10 பாலிசியின்படி மனுதாரர்களுக்கு ஏதாவது நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்றால் 2 ம் எதிர்மனுதாரர் நிறுவனம் தான் கொடுக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. Fake policy குறித்து விசாரணை செய்வதற்கு காவல் துறையில் மதுரையில் தனியாக ஒரு பிரிவு இயங்கி வருகிற விவரம் எனக்கு தெரியாது.

ஆனால் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தால் சம்பந்தப்பட்ட பிரிவிற்கு அனுப்பிவிடுவார்கள். மசாஆ10 பாலிசி உண்மையான பாலிசி என்பதால் தான் காலதாமதமாக புகார் கொடுத்துள்ளோம் என்றும் மனுதாரர்களுக்கு கிடைக்கக்கூடிய இழப்பீட்டு தொகையை எங்கள் நிறுவனம் தான் வழங்க வேண்டும் என்றால் சரியல்ல.